மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

79—

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை

***2593—திரு. தூசி கே. மோகன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யாறு தொகுதி, வெம்பாக்கம் வட்டம், மாங்கால் கூட் ரோட்டில் அமைந்துள்ள தொழிற்பேட்டையில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், மாங்கால் கூட் ரோட்டில் அமைந்துள்ள தொழிற்பேட்டையில் உள்ள காப்பீட்டாளர்கள் மற்றும் குடும்பத்தினர், செய்யாறு மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்களில் வசிப்பதால், செய்யாறில் "3 மருத்துவர் வகை" தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் அமைக்கப்பட்டு, 1–1–2014 முதல் செயல்பட்டு வருகின்றது. இம்மருந்தகத்தில் 4,957 காப்பீட்டாளர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். மாதம் ஒன்றுக்கு 1,421 காப்பீட்டாளர்கள் மற்றும் குடும்பத்தினர் வெளி நோயாளிகளாக மட்டுமே சிகிச்சை பெற்று வருகின்றனர். எனவே, மேற்கண்ட இடத்தில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை தற்போது தொடங்க இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன் அவர்கள்.*

திரு. தூசி கே. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகள் இல்லாத மாநிலம், வறுமைகள் இல்லாத நானிலம், பொறுமைகள் குன்றாத நன்னிலம், (மேசையைத் தட்டும் ஒலி) பேதைகள் இல்லாத பொன்னிலம், (மேசையைத் தட்டும்*

ஒலி) மேதைகள் குன்றாத ஐவகை நிலம், அன்பும் அறமும் சேர்ந்திடும், அறிவோடு ஆற்றலும் ஓங்கிடும், பொற்கால ஆட்சி தரும் பொன்மனத் தலைவி, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொன் மலர்ப் பாதங்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய செய்யாறு தொகுதிக்குட்பட்ட மாங்கால் கூட் ரோட்டில் அமைந்துள்ள சிப்காட் தொழிற்பேட்டையில், சுமார் 22,000 நேர்முகத் தொழிலாளர்களும், 2,000 ஒப்பந்தத் தொழிலாளர்களும் பணியாற்றி வருகின்றனர். பணிக் காலத்தின்போது, எதிர்பாராமல் விபத்துகள் ஏதேனும் ஏற்பட்டால், 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள செய்யாறு அல்லது காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு மிகுந்த சிரமங்களோடு செல்ல வேண்டியுள்ளது. இதனால், உயிர்ச் சேதம் ஏற்பட வாய்ப்பிருக்கிறது.

“தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும், தேடுங்கள் கிடைக்கும்” என ஏசுநாதர் சொன்னார். ஆனால், எங்கள் அம்மா தட்டாமலேயே, கேட்காமலேயே, தேடாமலேயே (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டு மக்களுக்கு நாளும் அள்ளித் தரும் அட்சயப் பாத்திரம்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், தொழிலாளர்களின் நலன் கருதி, எதிர்காலத்திலாவது மறுபரிசீலனை செய்து, சிப்காட் தொழிற்பேட்டையில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4—12—2014 ஆம் தேதியன்று புது டெல்லியில் நடைபெற்ற தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழகத்தின் 163—வது கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, 50,000—மும் அதற்கு மேலும் காப்பீட்டாளர்கள் உள்ள இடங்களில் மட்டுமே தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அமைக்க முடியும். மேற்படி மருந்தகத்தில், 4,957 காப்பீட்டாளர்களே பதிவு

2016 ஆகஸ்ட் 17]

செய்துள்ளதால், அவ்விடத்தில், தற்போது தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை தொடங்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேற்கண்ட பகுதியில் காப்பீட்டாளர்களின் எண்ணிக்கை 50,000–க்கு மிகும்போது, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன் அவர்கள்.

முற்பகல் 10–45

திரு. தூசி கே. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதிலில், "தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்புகள் இல்லை" என்று சொல்லிவிட்டார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சொன்னதையும் செய்வார், சொல்லாததையும் செய்வார் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில், அங்கே 7 கம்பெனிகள் தற்போது இயங்கி வருகின்றன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் நடத்தப்பட்ட உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின்போது போடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் அடிப்படையில், அந்தப் பகுதியில், இந்த நிதியாண்டில் 4 கம்பெனிகள் தொடங்கப்படவிருக்கின்றன. ஆகவே, எதிர்காலத்தில் கிட்டத்தட்ட 50,000 தொழிலாளர்கள் வரவிருக்கும் சூழ்நிலை ஏற்படவிருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எனது கோரிக்கையினை மறுபரிசீலனை செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, இந்த நிதியாண்டிலேயே தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

[2016 ஆகஸ்ட் 17

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், "50,000—க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வரவிருக்கிறார்கள்" என்று கூறினார்கள். எத்தனை தொழிலாளர்கள் இருந்தாலும், 50,000 தொழிலாளர்கள் ஈட்டுறுதித் திட்டத்தில் பதிவு செய்திருந்தால்தான், ஈட்டுறுதி மருத்துவமனை ஆரம்பிக்க வேண்டும் என்ற ஒரு norms இருக்கின்றது. மேலும், தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து ஈட்டுறுதி மருந்தகங்களும், மருத்துவமனைகளும் ESI கழகத்தின்கீழ் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த ESI கழகம் மத்திய அரசாங்கத்திற்குட்பட்டதாகும். ஆதலால், மத்திய அரசு எந்த norms—யை வைத்திருக்கின்றதோ, அந்த norms—ன்படிதான், ஈட்டுறுதி மருந்தகங்களும், மருத்துவமனைகளும் செயல்படும். மத்திய அரசின் norms—ன்படிதான், ஈட்டுறுதி மருந்தகம் அல்லது மருத்துவமனை அமைக்க இயலும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். கூடிய விரைவில், அந்த norms மாறினால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடத்தில், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

மேகதாதுவில் கர்நாடக அரசு தடுப்பணை கட்டுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான ஒரு பிரச்சினையை, அவசரப் பொது